கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்கள், விரிவான வருமானக் கூற்று, நிதி நிலமைக் கூற்று, உரிமையாண்மையில் மாற்றங்கள் பற்றிய கூற்று, காசுப்பாய்வுக் கூற்று ஆகியவற்றுடன் கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களையும் உள்ளடக்குகின்றன. இந்த நிதிக் கூற்றுக்கள், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் பரிந்துரைக்கப்பட்டு வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு(இநிஅநி.்.இகநி) இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

2021.07.26ஆம் திகதி பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டது.

2.2. அளவீட்டிற்கான அடிப்படை

நிதி நிலமைக் கூற்றில் பின்வரும் விடயங்களைத் தவிர, நிதிக் கூற்றுக்கள் வரலாற்றுக் கிரய எண்ணக்கருவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

- நியாயமான பெறுமதியில் அளவிடப்பட்ட நிதிசார் சொத்துக்கள் மற்றும் நிதிசார் பொறுப்புக்கள்.

- செயற்றிட்ட அலகு கடன் முறையின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்ட ஊழியர் நலன் பொறுப்பு. (இகநி 19)
- ஆதனம், பொறித்தொகுதி ரூ உபகரணங்கள் மற்றும் மோட்டார் வாகனங்கள் என்பன மீளமதிப்பிடப்பட்ட தொகைகளில் காட்டப்படுகின்றன.

பணிப்பாளர்கள் மதிப்பீடு ஒன்றை மேற்கொண்டனர் அதன்மூலம் கூட்டுத்தாபனம் தொடர்ந்து இயங்கும் ஆற்றல் உள்ளமையினால் எதிர்காலத்தில் ஒடுக்கவோ அல்லது வியாபாரத்தை இடைநிறுத்தவோ அவசியமில்லை என அவர்கள் எதிர்வுகூறினர்.

2.3. தொழிற்பாட்டு மற்றும் வெளிப்படுத்தல் நாணயம்

கூட்டுத்தாபனத்தின் தொழிற்பாட்டு நாணயம் ஆன இலங்கை ரூபாய்களில் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படுவதுடன் சகல பெறுமதிகளும் கிட்டிய ரூபாய்களில் காட்டப்படுகின்றன.

2.4. மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புகளின் உபயோகம்

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு(இநிஅநி.்.இகநி) இசைந்து நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போதும், கணக்கீட்டுக் கொள்கைகளை பிரயோகிக்கும்போதும் காட்டப்பட்டுள்ள சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள் மற்றும் செலவினங்கள் தொடர்பில் மதிப்பீடு செய்தலும், தீர்ப்புகள் மற்றும் எடுகோள்களை எடுப்பதும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். தீர்ப்புக்கள் மற்றும் மதிப்பீடுகள் யாவும் காலாகாலமாக உள்ள அனுபவத்தின் அடிப்படையிலும், சூழ்நிலைமைகளின் கீழ் நியாயமானதாக கருதக்கூடிய எதிர்பார்ப்புக்கள் அடங்கலாக ஏனைய காரணிகளின் அடிப்படையிலும் அமைந்துள்ளன. எனவே உண்மையான அனுபவமும் பெறுபேறுகளும் இந்த தீர்ப்புகள் மற்றும் மதிப்பீடுகளிலிருந்து வேறுபடலாம்.

3. முக்கிய கணக்கீட்டு கொள்கைகள்

கீழே விவரிக்கப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகள் வேறுவகையில் குறிப்பிட்டாலொழிய இந்த நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்ட சகல காலங்களிலும் மாறாது பிரயோகிக்கப்பட்டுள்ளன.

3.1. வெளிநாட்டு நாணயம்

3.1.1. வெளிநாட்டு நாணய கொடுக்கல்வாங்கல்கள்

கூட்டுத்தாபன நிதிக் கூற்றுக்களை தயாரிக்கையில், வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல்வாங்கல்களில் அத்திகதியில் நடைமுறையிலிருந்த பரிமாற்று விகிதங்களின் அடிப்படையில் கணிக்கப்பட்டு குறிப்பிடப்படுகின்றன. ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும், வெளிநாட்டு கொடுக்கல்வாங்கல் திகதியின் இறுதியில் இருந்த பரிமாற்று விகிதங்களின்படி

குறிப்பிடப்பட்டுள்ளன. பணமல்லாத விடயங்கள் நியாயமான பெறுமதிகளில் அளவிடப்பட்டு அந்த நியாயமான பெறுமதிகளில் அளவிடப்பட்ட திகதியில் இருந்த பரிமாற்று விகிதங்களில் கணிக்கப்பட்டுள்ளன. வரலாற்றுக் கிரயத்தில் அளவிடப்பட்ட பணமல்லாத விடய கொடுக்கல்வாங்கல் இடம்பெற்ற திகதியில் இருந்த பரிமாற்று விகிதங்களில் கணிக்கப்பட்டுள்ளன. பணஞ்சார் விடயங்களை கொடுத்துதீர்க்கும்போது எழுகின்ற பரிமாற்று விகித வேறுபாடுகள் குறித்த காலப்பகுதிக்கான இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அடங்குகின்றன.

3.2. சொத்துக்களும் அவற்றை மதிப்பீடு செய்வதற்கான அடிப்படைகளும்

நிதி நிலமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்ட சொத்துக்களாவன காசு, வங்கி மீதிகள் மற்றும் அறிக்கையிடும் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் அல்லது கூட்டுத்தாபன வியாபாரத்தின் சாதாரண தொழிற்பாட்டு சுற்றோட்டத்தின்போது பணமாக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிற தன்மையில் எது குறுகியதோ அத்தகைய கொடுக்கல்வாங்கல்கள் என்பனவாகும். நடைமுறைச் சொத்துக்கள் தவிர்ந்த சொத்துக்களாவன அறிக்கையிடும் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்கு மேல் வைத்துக்கொள்வதற்கு கூட்டுத்தாபனம் எதிர்பார்க்கும் சொத்துக்களாகும்.

3.2.1. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்

3.2.1.1. இனங்காணலும் அளவிடுதலும்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் என்பன திரண்ட தேய்மானம் மற்றும் கையுதிர்ப்பு தேய்மான நட்டம் ஆகியவற்றை குறைத்து கிரயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் ஒவ்வொரு பகுதியின் பாவனைக்காலம் வேறுபடுமாயின், அப்பகுதிகள் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் பிரத்தியேக விடயங்களாக (பிரதான கூறுகள்) கணக்குகளில் காட்டப்படும்.

3.2.1.2. சொந்தச் சொத்துக்கள்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் கிரயமானது, அதன் கொள்வனவு விலை மற்றும் அதன் எதிர்பார்த்த பாவனைக்காக வேலை செய்யும் நிலமைக்கு கொண்டுவருவதற்கு சம்பந்தப்படும் ஏதேனும் நேரடி செலவுகளையும் உள்ளடக்குகிறது. சுயமாக கட்டப்பட்ட சொத்தின் கிரயமானது, பொருட்களின் கொள்விலை, நேரடிக் கூலி மற்றும் அதன் எதிர்பார்த்த பாவனைக்காக வேலை செய்யும் நிலமைக்கு கொண்டுவருவதற்கு சம்பந்தப்படும் ஏதேனும் நேரடி செலவுகளையும் உள்ளடக்குகிறது. இதுவும், குறித்த விடயத்தை பகுதிகளாக கழற்றுதல், அகற்றுதல் செலவுகளையும் மற்றும் ஓர் இடத்திலிருந்து தேவையான வேறொரு இடத்துக்கு கொண்டுசென்று மீள நிறுவுவதற்கான செலவுகளையும் உள்ளடக்குகிறது.

உபகரணத்தின் தொழிற்பாட்டுக்கு ஒன்றிணைக்கப்பட்ட மென்பொருளை கொள்வனவு செய்கையில் அது உபகரணத்தின் ஒரு பகுதியாக மதிப்பிடப்படும்.

3.2.1.3. குத்தகைச் சொத்துக்கள்

கூட்டுத்தாபனம் உரிமையின் அபாயங்கள் மற்றும் வெகுமதிகள் அனைத்தையும் கணிசமாக ஊகிக்கும் குத்தகைகள் நிதிக் குத்தகைகளாக வகைப்படுத்தப்படும். ஆரம்ப இனங்காணலின் பின்னர் அதன நியாயமான பெறுமதியின் குறைந்த பெறுமதிக்கும் இழிவு குத்தகை தவணைக்கொடுப்பனவுக்கும் சமமான தொகைக்கு குத்தகைச் சொத்து மதிப்பிடப்படும். ஆரம்ப இனங்காணலுக்கு பின்னராக, அந்த சொத்துக்கு ஏற்புடையதான கணக்கீட்டுக் கொள்கைக்கு இணங்க அச்சொத்து கணக்கிடப்படுகிறது. பொறுப்பின் எஞ்சிய மீதி பொருட்டு மாறாத வட்டி வீதத்தை எய்துவதை வசதியளிக்கும் முகமாக நிதியியல் கட்டணங்களுக்கும் குத்தகைப் பொறுப்பு குறைவுக்கும் இடையில் குத்தகை தவணைக்கொடுப்பனவுகள் பங்கீடுசெய்யப்படுகின்றன.

நிதியியல் கட்டணங்கள் வருமானக் கூற்றில் நிதிச் செலவுகளாக இனங்காணப்படுகின்றன. ஏனைய குத்தகைகள் செயற்பாட்டு குத்தகைகளாக கருதப்படுவதுடன், கூட்டுத்தாபன நிதி நிலமைக் கூற்றில் இனங்காணப்படுவதில்லை.

3.2.1.4. பின்னரான கிரயங்கள்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் ஏதேனும் பகுதியை புதிதாக இடுவதற்கான கிரயமானது, குறித்த பகுதியை இடுவதன்மூலம் நிறுவனத்துக்கு கிடைக்கும் எதிர்கால பொருளாதார நன்மை மற்றும் அதன் பெறுமதியை உறுதியாக கணிக்கலாம் என தோன்றுவதாயின் குறித்த விடயத்தின் இனங்காணப்பட்ட பெறுமதிக்கு அச்செலவினம் சம்பந்தப்படும். புதிதாக இட்ட பகுதியின் பெறுமதி இனங்காணப்பட மாட்டாது.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் நாளாந்த பராமரிப்பு செலவினங்கள் இலாபம் அல்லது நட்ட கூற்றில் இனங்காணப்படும்.

3.2.1.5. இனங்காணப்படாமை

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் கொண்டுவரப்பட்ட தொகையானது, விற்பனை மீது இனங்காணப்பட மாட்டாது அல்லது அதன் பாவனை அல்லது விற்பனை மூலம் நிறுவனத்துக்கு எதிர்கால பொருளாதார நன்மைகள் எதுவும் கிடைக்காவிடின் குறித்த தொகையானது இனங்காணப்பட மாட்டாது. இனங்காணப்படாமை மீதான ஆதாயம் அல்லது இழப்பு, இலாபம் அல்லது நட்ட கூற்றில் ஏனைய வருமானத்தின் கீழ் காட்டப்படும்.

3.2.1.6. மறுபடிவிலைமதித்தல்

ஒவ்வொரு மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை தராதரமான மதிப்பீட்டாளரால் இறையில் காணி மற்றும் கட்டடங்கள் திறந்த சந்தைப் பெறுமதியை பிரயோகித்து மீள் பெறுமதியிடல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. சொத்துக்கள் மீள் மதிப்பீட்டுத்தொகைகளில் பதியப்பட்டு, மதிப்பீட்டு மிகை சொத்தின் நடைமுறை நிகர பெறுமதி மீது இனங்காணப்பட்டு மறுபடிவிலைமதித்தல்

ஒதுக்கத்துக்கு மாற்றப்படும். சொத்து இனங்காணப்படாத சந்தர்ப்பத்தில் மறுபடிவிலைமதித்தல் ஒதுக்கம் தக்கவைக்கப்பட்ட வருமானத்துக்கு மாற்றப்படும்.

3.2.1.7. தேய்மானம்

தேய்மானமிடத்தக்க தொகையில் தேய்மானம் கணக்கிடப்படுகிறது. அதாவது சொத்தொன்றின் கொள்விலை அல்லது கொள்விலைக்காக பிரதியிடப்பட்ட ஏனைய பெறுமதியில் இருந்து அதன் எஞ்சிய பெறுமதியை கழித்த பின்னர் வரும் தொகையாகும்.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் ஒவ்வொரு பகுதியினதும் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலத்தின் அடிப்படையில் நேர் கோட்டு முறையில் இலாபம் அல்லது நட்ட கூற்றில் இனங்காணப்படுகிறது காரணம் அதன்மூலம் சொத்தில் காணப்படும் எதிர்கால பொருளாதார நன்மைகளை பிரயோசனத்துக்கு எடுக்கும் விதத்தை மிகவும் தெளிவாக காட்டுவதனாலாகும். குத்தகைக் காலம் முடிவில் கூட்டுத்தாபனத்துக்கு உரித்தாகும் என உறுதியான நிலமையிலன்றி குத்தகைக் காலம் மற்றும் அவற்றின் பயன்பாட்டுக் காலத்தின் குறைந்த காலப்பகுதிக்கு குத்தகைச் சொத்துகளுக்கான தேய்மானம் கணிக்கப்படும். காணிக்கு தேய்மானம் கணிக்கப்படுவதில்லை.

மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக்காலம் வருமாறு:

சொத்து வகுதி	பயன்பாட்டுக்காலம் (வருடங்கள்)	தேய்மான வீதம் (%)
கட்டடங்கள்	40	2.5%
பொறித்தொகுதி & இயந்திரம்	05	20%
தளபாடமும் பொருத்துக்களும்	10	10%
மோட்டார் வாகனங்கள்	05	20%
காரியாலய உபகரணங்கள்	05	20%
கணினிகள்	05	20%

ஒரு சொத்து பாவனைக்காக உள்ளபோது சொத்திற்கான தேய்மானம் ஆரம்பமாவதுடன் குறித்த சொத்து விற்பனைக்காக நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் குறித்த சொத்து இனங்காணப்படாத திகதி முதல் தேய்மானம் நிறுத்தப்படும்.

தேய்மானமிடும் முறை, பயன்பாட்டுக்காலம் மற்றும் மிகுதி பெறுமதிகள் என்பன ஒவ்வொரு நிதியாண்டு இறுதியிலும் மீளாய்வுசெய்யப்படுவதுடன் பொருத்தமானவிடத்து சீராக்கப்படும்.

3.2.2. நடைபெறும் மூலதனவேலை.

அறிக்கையிடும் திகதியில் முடிவுறுத்தப்படாத, குறித்த வருடத்தின்போது உறப்பட்ட மூலதன செலவினங்கள் நடைபெறும் மூலதன வேலை ஆக காட்டப்படும் அதேவேளை மூலதன சொத்து குறித்த வருடத்தில் நிறைவு செய்யப்பட்டு பயன்படுத்தக்கூடிய மூலதனச் சொத்துக்கள் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களுக்கு மாற்றப்பட்டுள்ளன.

3.2.3. கட்புலனாகாத சொத்துக்கள்

ஒரு கட்புலனாகாத சொத்து இனங்காணப்படுவது, சொத்துக்கள் என்றரீதியில் நிறுவனத்துக்கு பொருளாதார நன்மை கிடைத்தல் சாத்தியமாகக்கூடிய சந்தர்ப்பத்தில் மற்றும் குறித்த சொத்தின்

கிரயத்தை நம்பகரமாக அளவிடக்கூடியதன் பிற்பாடு திரண்ட காலக்கழிவு மற்றும் திரண்ட வலுக்குறைவு நட்டங்கள் ஆகியவற்றை குறைத்து பெறப்பட்ட கிரயத்தை நிறுவனத்துக்கு கொண்ட போகக்கூடிய சந்தர்ப்பத்திலாகும்.

3.2.3.1. மென்பொருள்

நிறுவன வன்பொருள்களுடன் உள்ளகரீதியாக சம்பந்தப்படாத தெளிவாக அடையாளங்காணக்கூடிய, நம்பகரமாக அளவிடக்கூடிய, எதிர்கால பொருளாதார நன்மைகளுக்கு வழிவகுக்கும் நோக்கில் உறப்பட்ட சகல கணினி மென்பொருள் செலவுகள், கட்புலனாகாத சொத்து வகுதியின் கீழ் நிதி நிலமைக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றன.

3.2.3.2. பின்னரான செலவினங்கள்

தொடர்புபட்ட குறித்துரைத்த சொத்துக்கு உள்ளடக்கப்படும் எதிர்கால பொருளாதார நன்மைகள் அதிகரிக்கப்படுமாயின் மாத்திரம் பின்னரான செலவினங்கள் மூலதனமாக்கப்படும். ஏனைய எல்லா செலவினங்களும் இலாபம் அல்லது நட்ட கூற்றில் உறப்பட்டதாக இனங்காணப்படும்.

3.2.3.3. காலக்கழிவு

சொத்தின் கொள்விலை மீது அல்லது கொள்விலை பொருட்டு பதிலிடப்பட்ட ஏனைய தொகையிலிருந்து எஞ்சிய பெறுமதியை கழித்து வரும் பெறுமதி மீது காலக்கழிவு கணக்கிடப்படும். காலக்கழிவு கட்புலனாகாத சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலத்தின் அடிப்படையில் நேர் கோட்டு முறையில் இலாபம் அல்லது நட்ட கூற்றில் இனங்காணப்படுகிறது காரணம் இது சொத்தில் காணப்படும் எதிர்கால பொருளாதார நன்மைகளின் எதிர்பார்த்த நுகர்வு முறையை மிகவும் நெருக்கமாக பிரதிபலிப்பதனாலாகும்.

இலங்கை அரச பொறியியற் கூட்டுத்தாபனம்
2018 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான
நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக்காலம் பின்வருமாறு:

சொத்து வகுதி	பயன்பாட்டு காலம் (வருடங்கள்)	தேய்மான வீதம் (%)
கணினி மென்பொருள	05	20%

காலக்கழிவு முறைமை, பாவனைக் காலம் மற்றும் எஞ்சிய பெறுமதிகள் என்பன ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் மீளாய்வுசெய்யப்படுவதுடன் தேவைப்படின் சீராக்கிக் கொள்ளப்படும்.

3.2.4. வியாபார இருப்புக்கள்

வியாபார இருப்புக்கள் குறிப்பிடப்படுவது, வழக்கொழிந்த மற்றும் மந்தமாக விடயங்கள் பொருட்டு உரிய ஏற்பாட்டினை மேற்கொண்டதன் பின்னர் அவற்றின் கொள்விலை மற்றும் நிகர தேறிய பெறுமதி ஆகியவற்றில் குறைந்த பெறுமதியின் மீதாகும். வியாபார இருப்புக்களின் கொள்விலையானது, அவற்றை கொள்வனவு செய்வதற்காக உறப்பட்ட சகல செலவுகள், மாற்றல் செலவுகள் அத்துடன் அவற்றை தற்போதைய அமைவிடம் மற்றும் நிலமைக்கு கொண்டுவருவதற்காக உறப்பட்ட ஏனைய செலவுகள் ஆகியனவற்றை உள்ளடக்குகிறது. நிகர தேறிய பெறுமதி என்பது, சாதாரண வியாபார நடைமுறையில் உள்ள மதிப்பிடப்பட்ட விற்பனை விலையிலிருந்து மதிப்பிடப்பட்ட தேறிய செலவு மற்றும்/அல்லது தற்போது அவற்றின் விற்கக்கூடிய நிலமைக்கு மாற்றுவதற்கான செலவு ஆகியவற்றை கழித்து வரும் பெறுமதியாகும்.

வியாபார இருப்புக்களின் மீள அறவிடக்கூடிய பெறுமதியை மதிப்பிடும் முகமாக ஒவ்வொரு அறிக்கையிடும் காலப்பகுதி முடிவில் நிபுணர் ஒருவரினால் வியாபார இருப்புக்களின் அசைவு மீளாய்வு செய்யப்படுவதுடன், மீள அறவிட முடியாது என அடையாளங்காணப்படும் விடயங்கள் ஆண்டின்போது பதிவழிக்கப்படும்.

3.2.5. நடைபெறும் வேலை

எதிர்கால வேலைகள் பொருட்டு உறப்படுகின்ற ஒப்பந்தம்சார் கிரயங்கள் அவற்றின் பெறுமதியை மீள அறவிடலாம் என ஊகிக்கும்போது சொத்து ஒன்றாக இனங்காணப்படுவதுடன், அத்தகைய கிரயங்கள் நடைபெறும் வேலை என வகைப்படுத்தப்படுகின்றன. அவற்றின் வேறுபாடு மற்றும் உரிமைகோரிக்கை ஒப்பந்த வருமானத்தில் மட்டும் இனங்காணப்படுவது, உரிய வாடிக்கையாளர் அந்த வேறுபாடு மற்றும் உரிமைகோரிக்கை தொடர்பில் அங்கீகாரம் வழங்கும் என ஊகிக்கும்போதும் உரிய வருமானத் தொகையை நம்பகரமாக அளவிடக்கூடிய சந்தர்ப்பத்தில் மட்டுமே. அவை இவ்வாறு வருமானத்தில் இனங்காணப்படும் வரையில் வேறுபாடு மற்றும் உரிமைகோரிக்கை பொருட்டு உறப்படுகின்ற கிரயங்கள் நடைபெறும் வேலை என வகைப்படுத்தப்படுகின்றன.

3.2.6. காசும் காசுக்குச் சமமானவைகள்

அறிந்த பணத்தொகைகளாக உடனடியாக மாற்றத்தக்கதாகவுள்ளதும் காசுப்பாய்ச்சல் கூற்றின் நோக்கத்துக்காக கேட்குமிடத்து மீள செலுத்தத்தக்க வங்கி மேலதிகப் பற்று தவிர்ந்த தேறிய பெறுமதிகளின் மாற்றங்களில் முக்கியத்துவமற்ற அபாயங்களுக்கு உட்பட்டு, காசு மீதிகள், அழைப்பு வைப்புக்கள், கோரிக்கை வைப்புக்கள், குறுங்கால உயர் திரவநிலை கொண்ட முதலீடுகள் என்பன காசும் காசுக்குச் சமமானவைகளில் உள்ளடங்குகின்றன.

3.2.7. வலுக்குறைந்த நிதிசார்பற்ற சொத்துக்கள்

ஏதேனும் சொத்து வலுக்குறையும் நிலமையை காட்டுகிறதா என கூட்டுத்தாபனம் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மதிப்பீடு செய்கிறது. அத்தகைய நிலமை காணப்படுமாயின் அல்லது சொத்தொன்று பொருட்டு வருடாந்த வலுக்குறைவு சோதனை தேவைப்படும்போது குறித்த சொத்திலிருந்து அறவிடக்கூடிய தொகை பற்றிய மதிப்பீடு ஒன்றை கூட்டுத்தாபனம் மேற்கொள்ளும். பாவனையின்போது சொத்தின் பெறுமதிக்கும் விற்பனைக்கான செலவுகளை குறைத்து அதன் நியாயமான பெறுமதிக்கும் இடையில் உயர்வான பெறுமதியே சொத்திலிருந்து அறவிடக்கூடிய தொகை என கருதப்படும். அது ஒவ்வொரு சொத்துக்கும் வெவ்வேறாக தீர்மானிக்கப்படும். குறித்த சொத்திலிருந்து ஏனைய சொத்துக்கள் அல்லது சொத்துக்கள் குழுவிலிருந்து பெரிதும் சுயாதீனமாக காசு உட்பாய்ச்சல் உற்பத்தியாகாவிடின் ஒவ்வொரு சொத்துக்கும் வெவ்வேறாக தீர்மானிக்கப்படும். ஏதேனும் சொத்தின் முன்கொண்டுசெல்லும் பெறுமதியானது அதன் அறவிடக்கூடிய தொகையை விட அதிகமாயின் அச்சொத்து வலுக்குறைந்ததாக கருதப்பட்டு அதன் அறவிடக்கூடிய தொகைக்கு பதியப்படும்.

பாவனைப் பெறுமதியை மதிப்பிடுகையில், பணத்தின் கால பெறுமதி மற்றும் சொத்துக்கு குறித்தரைத்த அபாயத்தின் நடைமுறை சந்தை மதிப்பீடுகளை பிரதிபலிக்கும் முன் வரி கழிவு வீதங்களைப் பயன்படுத்தி மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல் அவற்றின் தற்போதைய பெறுமதிக்கு தள்ளுபடி செய்யப்படுகின்றன. விற்பனைக்கான செலவுகளை குறைத்து அதன் நியாயமான பெறுமதியை தீர்மானிக்கையில், அண்மைய சந்தை கொடுக்கல்வாங்கல்கள், இருப்பின் அவை கருத்திலெடுக்கப்படும். அத்தகைய கொடுக்கல்வாங்கல் எதனையும் அடையாளங்காண முடியாவிடின் பொருத்தமான மதிப்பிடல் மாதிரியுருவொன்று பயன்படுத்தப்படுகிறது.

தொடரும் தொழிற்பாட்டின் வலுக்குறைவு நட்டம் விரிவான வருமானக் கூற்றில் இனங்காணப்படுவது அவ்வாறு வலுக்குறைக்கப்பட்ட சொத்தின் தொழிற்பாட்டுடன் இணங்கும் செலவு வகுதியினுள் ஆகும்.

கடந்தகால வலுக்குறைவு நட்டம் இனங்காணப்பட்டமையினால் சொத்துக்களின் அறவிடத்தக்க தொகையை தீர்மானிப்பதற்கு பயன்படுத்தப்படும் மதிப்பீடுகளில் இருந்தால் மாத்திரமே முன்னமே இனங்காணப்பட்ட வலுக்குறைவு நட்டம் திருப்பியெடுக்கப்படும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் சொத்தின் முன்கொண்டுசெல்லும் தொகை அதன் அறவிடத்தக்க தொகைக்கு அதிகரிக்கும். கடந்த வருடங்களில் குறித்த சொத்து பொருட்டு வலுக்குறைவு இழப்பு எதுவும் இனங்காணப்படவில்லை எனின் நிகர தேய்மானம் தீர்மானிக்கும் முன்கொண்டுசெல்லும் தொகையை அந்த அதிகரித்த தொகை விஞ்ச முடியாது. அத்தகைய திருப்பியெடுப்பு விரிவான வருமானக் கூற்றில் இனங்காணப்படுகிறது.

இலங்கை அரச பொறியியற் கூட்டுத்தாபனம்
2018 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான
நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

3.3. நிதிசார் கருவிகள்

3.3.1 நிதிசார் சொத்துக்கள்

3.3.1.1 ஆரம்ப இனங்காணலும் அளவிடுதலும்

இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இன் நோக்கெல்லையில் அடங்கும் நிதிசார் சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டம், கடன்கள் மற்றும் வருமதிகள், முதிர்ச்சியடையும் வரை வைக்கப்பட்டுள்ள முதலீடுகள், விற்கக்கூடிய நிதிசார் சொத்துக்கள், அல்லது பயனுறுவான ஹெஜ் உடன்படிக்கையொன்றின் ஹெஜிங் கருவிகளாக நிர்ணயிக்கப்பட்ட வழிப்பொருட்கள் மூலம் நியாயமான பெறுமதியிலுள்ள நிதிசார் சொத்துக்களாக வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலில் அதன் நிதிசார் சொத்துக்களின் வகைப்படுத்தலை கூட்டுத்தாபனம் தீர்மானிக்கிறது.

நிதிசார் சொத்துக்கள் யாவும் ஆரம்பத்தில் நியாயமான பெறுமதியில் இனங்காணப்படுவதுடன், அவ்வாறில்லாத சொத்துக்கள் இலாபம் அல்லது நட்டம் மூலம் நேரடியாக சேரத்தக்க கொடுக்கல்வாங்கல் கிரயத்தில் இனங்காணப்படும். சந்தையில் (ஒழுங்கான முறையிலான வர்த்தகம்) காணப்படும் ஒழுங்குவிதி அல்லது சமவாயம் பிரகாரம் வழங்கப்பட்ட காலவரையினுள் நிதிசார் சொத்துக்கள் கொள்வனவு செய்கையில் அல்லது விற்பனை செய்கையில் வர்த்தக திகதியில் அதாவது கூட்டுத்தாபனம் குறித்த சொத்தினை வாங்குவதற்கு அல்லது விற்பதற்கு விதித்துரைத்த திகதியில் இனங்காணப்படும்.

கூட்டுத்தாபன நிதிசார் சொத்துக்களில் காசும் காசுக்குச் சமமானவைகள், குறுங்கால வைப்புக்கள், வியாபார மற்றும் ஏனைய வருமதிகள், கடன்கள் மற்றும் விலைகூறப்பட்ட உரித்துக் கருவிகள் என்பன அடங்குகின்றன.

3.3.1.2 பின்னரான அளவீடு

நிதிசார் சொத்துக்களின் பின்னரான அளவீடு கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு அவற்றின் வகைப்படுத்தலின் மீது தங்கியுள்ளது.

3.3.1.3 இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய பெறுமதியிலான நிதிசார் சொத்துக்கள்

வியாபாரத்துக்காக வைக்கப்பட்டுள்ள நிதிசார் சொத்துக்கள் மற்றும் இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயமான பெறுமதிக்கு ஆரம்ப இனங்காணலின் மீது விதித்துரைக்கப்பட்ட நிதிசார் சொத்துக்கள் என்பன இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய பெறுமதியிலான நிதிசார் சொத்துக்களில் உள்ளடங்குகின்றன. நெருங்கிய காலத்தினுள் விற்கும் அல்லது மீள வாங்கும் நோக்கத்திற்காக சொத்துக்கள் பெறப்படின் அவை வியாபாரத்துக்காக வைக்கப்பட்டுள்ள நிதிசார் சொத்துக்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இனால் வரையறுக்கப்பட்டவாறு ஹெஜிங் கொடுக்கல்வாங்கலின்போது ஹெஜிங் கருவிகளாக பெயரிடப்படாத கூட்டுத்தாபனம் செய்துகொண்டுள்ள வழிப்பொருள் நிதிசார் கருவிகளும் இவ்வகுதிக்குள் அடங்குகின்றன.

பிரிக்கப்பட்ட பதிக்கப்பெற்ற வழிப்பொருள் உள்ளிட்ட வழிப்பொருள்கள், பயனுறு ஹெஜிங் கருவிகளாக பெயரிடப்பட்டாலொழிய அவை வியாபாரத்துக்காக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள் எனவும் வகைப்படுத்தப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய பெறுமதியிலான நிதிசார் சொத்துக்கள் வருமானக் கூற்றில் நிதி வருமானம் அல்லது நிதிச் செலவில் இனங்கண்டு நியாய பெறுமதியில் மாற்றங்களுடன் நிதி நிலமைக் கூற்றில் நியாய பெறுமதியில் கொண்டுசெல்லப்படுகின்றன.

அண்மைக் காலத்தினுள் விற்கும் எண்ணம் உசிதமானதா இல்லையா எனக் கருதாது கூட்டுத்தாபனம் அதன் நிதிசார் சொத்துக்களை இலாபம் அல்லது நட்டம் (வியாபாரத்துக்காக வைக்கப்பட்டுள்ள) ஊடாக நியாய பெறுமதியில் மதிப்பீடு செய்கிறது. செயலற்ற சந்தை காரணமாக இந்த நிதிசார் சொத்துக்ளை கூட்டுத்தாபனத்துக்கு விற்க முடியாதபோதும் எதிர்வுகூறத்தக்க எதிர்கால முக்கியமான மாற்றங்களில் அவற்றை விற்பதற்கு முகாமைத்துவம் எண்ணும்போதும் கூட்டுத்தாபனமானது அரிய சந்தர்ப்பங்களில் இந்த நிதிசார் சொத்துக்ளை மீள வகைப்படுத்த தீர்மானிக்கலாம். கடன்கள் மற்றும் வருமதிகள், விற்பனைக்கு தயாராகவுள்ள அல்லது முதிர்ச்சிக்கு வைக்கப்பட்டுள்ளவற்றிக்கான மீள்வகைப்படுத்தல் சொத்துக்களின் தன்மையில் தங்கியுள்ளது.

3.3.1.4 முதிர்ச்சியடையும் வரையில் வைக்கப்பட்டுள்ள நிதிசார் சொத்துக்கள்

கூட்டுத்தாபனம் முதிர்வுகாலம் வரை கடன் பிணையங்களை வைத்திருப்பதற்கான எண்ணமும் ஆற்றலும் கொண்டிருப்பின் அப்போது அத்தகைய நிதிசார் சொத்துக்கள் முதிர்வுக்காக வைக்கப்பட்டுள்ள சொத்துக்களாக வகைப்படுத்தப்படுகின்றன. அத்தகைய சொத்துக்கள் நேரடியாக சேர்ந்த ஏதேனும் கொடுக்கல்வாங்கல் செலவுடன் நியாயமான பெறுமதியில் ஆரம்பத்தில் இனங்காணப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலுக்கு பிற்பாடு, முதிர்வுக்காக வைக்கப்பட்டுள்ள நிதிசார் சொத்துக்கள் பயனுறு வட்டி முறையிலிருந்து ஏதேனும் வலுக்குறைவு நட்டங்களை கழித்து காலக்கழிவுசெய்யப்பட்ட கிரயத்தில் அளக்கப்படும்.

கொள்வனவு மீதான ஏதேனும் கழிவு அல்லது வட்டம் மற்றும் பயனுறு வட்டி வீதத்தின் (ப.வ.வீ.) இணைந்த பகுதியொன்றான கட்டணங்கள் அல்லது செலவுகள் என்பவற்றை கருத்திற்கொண்டு காலக்கழிவுசெய்யப்பட்ட கிரயம் கணக்கிடப்படுகிறது.

ப.வ.வீ. காலக்கழிவு, வருமானக் கூற்றில் நிதி வருமானத்தின் கீழ் அடங்குகிறது. வலுக்குறைவு மூலம் எழும் நட்டங்கள் வருமானக் கூற்றில் நிதி செலவில் இனங்காணப்படுகிறது.

3.3.1.5 கடன்கள் மற்றும் வருமதிகள்

முனைப்பான சந்தையொன்றில் கூறப்படாத நிரந்தர அல்லது தீர்மானிக்கத்தக்க கொடுப்பனவுடனான நிதிசார் சொத்துக்கள் கடன்கள் மற்றும் வருமதிகள் என கருதப்படுகின்றன. அத்தகைய சொத்துக்கள் நேரடியாக சேர்ந்த ஏதேனும் கொடுக்கல்வாங்கல் செலவுடன் நியாய பெறுமதியில் ஆரம்பத்தில் இனங்காணப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலுக்கு பிற்பாடு, கடன்கள் மற்றும் வருமதிகள் பயனுறு வட்டி முறையிலிருந்து ஏதேனும் வலுக்குறைவு நட்டங்களை கழித்து காலக்கழிவுசெய்யப்பட்ட கிரயத்தில் அளக்கப்படும். காசும் காசுக்கு

சமமானவைகள் மற்றும் வர்த்தக & ஏனைய வருமதிகள் ஆகியவற்றை கடன்கள் மற்றும் வருமதிகள் உள்ளடக்குகின்றன.

3.3.1.6 விற்பனைக்குத் தயாராகவுள்ள நிதிசார் சொத்துக்கள்

விற்பனைக்குத் தயாராகவுள்ள நிதிசார் சொத்துக்கள் என்பது விற்பனைக்குத் தயாரான வழித் தோன்றா நிதிசார் சொத்துக்கள் அல்லது மேலே நிதிசார் சொத்து வகுதிகள் எவற்றிலேனும் வகைப்படுத்தப்படாத சொத்துக்களாகும். விற்பனைக்குத் தயாராகவுள்ள நிதிசார் சொத்துக்கள் நேரடியாக சேர்ந்த ஏதேனும் கொடுக்கல்வாங்கல் செலவுடன் நியாய பெறுமதியில் ஆரம்பத்தில் இனங்காணப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலின் பிற்பாடு, அவை நியாயமான பெறுமதியில் அளக்கப்படுகின்றன. அத்துடன், விற்பனைக்குத் தயாராகவுள்ள கடன் கருவிகள் மீது வலுக்குறைவு நட்டங்கள் மற்றும் வெளிநாட்டு நாணய வேறுபாடுகள் தவிர்ந்த அவற்றில் ஏற்படும் மாற்றங்கள் ஏனைய விரிவான வருமானத்தில் இனங்காணப்படுவதுடன் உரிமையாண்மையில் நியாய பெறுமதி ஒதுக்கத்தில் முன்வைக்கப்பபடுகின்றன. ஒரு முதலீடு இனங்காணப்படாத பொழுது உரிமையாண்மையில் திரண்ட ஆதாயம் அல்லது இழப்பு இலாபம் அல்லது நட்டக் கூற்றில் மீளவகைப்படுத்தப்படும். விற்பனைக்குத் தயாராகவுள்ள நிதிசார் சொத்துக்கள் உரிமையாண்மை பிணையங்களையும் கடன் பிணையங்களையும் உள்ளடக்குகின்றன.

நெருங்கிய காலத்தினுள் விற்கும் ஆற்றலும் எண்ணமும் உசிதமானதா இல்லையா எனத் தீர்மானிப்பதற்கு கூட்டுத்தாபனம் அதன் விற்பனைக்குத் தயாராகவுள்ள நிதிசார் சொத்துக்களை மதிப்பீடு செய்கிறது. செயலற்ற சந்தை காரணமாக இந்த நிதிசார் சொத்துக்களை கூட்டுத்தாபனத்துக்கு விற்க முடியாதபோதும் எதிர்வுகூறத்தக்க எதிர்கால முக்கியமான மாற்றங்களில் அவற்றை விற்பதற்கு முகாமைத்துவம் எண்ணும்போதும் கூட்டுத்தாபனமானது அரிய சந்தர்ப்பங்களில் இந்த நிதிசார் சொத்துக்களை மீள வகைப்படுத்த தீர்மானிக்கலாம். கடன்கள் மற்றும் வருமதிகளின் வரைவிலக்கணத்தை நிதிசார் சொத்துக்கள் அடையும்போதும் இந்த சொத்துக்களை எதிர்வுகூறத்தக்க எதிர்காலத்துக்காக அல்லது முதிர்ச்சியடையும் வரையில் எண்ணமும் ஆற்றலும் கூட்டுத்தாபனத்துக்கு இருக்கும்போதும் கடன்கள் மற்றும் வருமதிகள் என்பவற்றிக்கான மீள்வகைப்படுத்தல் அனுமதிக்கப்படும். அதற்கிணங்க நிதிசார் சொத்துக்களை வைத்திருப்பதற்கான ஆற்றலையும் எண்ணத்தையும் கூட்டுத்தாபனம் கொண்டிருக்கும்போது மட்டுமே முதிர்ச்சி வரை வைத்திருக்கும் வகுதிக்கான மீள்வகைப்படுத்தல் அனுமதிக்கப்படும்.

விற்பனைக்குத் தயாராகவுள்ள வகுதியிலிருந்து வகைப்படுத்தப்பட்ட நிதிசார் சொத்தொன்று பொருட்டு, உரிமையாண்மையில் இனங்காணப்பட்ட அச்சொத்து மீதான ஏதேனும் முந்திய ஆதாயம் அல்லது இழப்பு, ப.வ.வீ. பயன்படுத்தி முதலீட்டின் எஞ்சிய காலப்பகுதிக்கு இலாபம் அல்லது நட்டக் கூற்றில் காலக்கழிவு செய்யப்படும். புதிய குறைக்கப்பட்ட தொகைக்கும் எதிர்பார்த்த காசுப் பாய்வுக்கும் இடையிலான ஏதேனும் வேறுபாடும் ப.வ.வீ. பயன்படுத்தி அச்சொத்தின் எஞ்சிய காலப்பகுதிக்கு இலாபம் அல்லது நட்டக் கூற்றில் காலக்கழிவு செய்யப்படும். குறித்த சொத்து பின்னர் வலுக்குறைந்ததாக தீர்மானிக்கப்படின், அப்போது உரிமையாண்மையில் பதியப்பட்ட தொகை வருமானக் கூற்றில் மீள்வகைப்படுத்தப்படும்.

3.3.1.7 இனங்காணப்படாமை

ஒரு நிதிசார் சொத்து அல்லது, நிதிசார் சொத்தொன்றின் ஒரு பகுதி அல்லது ஒத்த நிதிசார் சொத்து தொகுதியொன்றின் ஒரு பகுதி ஏற்புடையவிடத்து, பின்வரும் சந்தர்ப்பங்களில் இனங்காணப்பட மாட்டாது:

- குறித்த சொத்திலிருந்து காசுப்பாய்ச்சலை பெறும் உரிமை காலாவதியாதல்.
- குறித்த சொத்திலிருந்து காசுப்பாய்ச்சலை பெறும் உரிமையை கூட்டுத்தாபனம் உரிமைமாற்றி இருத்தல் அல்லது பெற்ற காசுப்பாய்ச்சலை ஓர் உடன்படிக்கையின் கீழ் தாமதமின்றி ஒரு மூன்றாம் தரப்பினருக்கு முழுமையாக கொடுப்பதற்கான கடப்பாட்டினை கூட்டுத்தாபனம் கொண்டிருத்தல் அத்துடன் ஏதாவது ஒன்று (அ) குழு சொத்தின் சகல இடர்களையும் வெகுமதிகளையும் கணிசமாக உரிமைமாற்றி இருத்தல், அல்லது (ஆ) குழு சொத்தின் சகல இடர்களையும் வெகுமதிகளையும் கணிசமாக உரிமைமாற்றவில்லை எனினும் சொத்தின் கட்டுப்பாட்டினை உரிமைமாற்றி கொடுத்தல்.

சொத்திலிருந்து காசுப்பாய்ச்சலை பெறும் உரிமையை கூட்டுத்தாபனம் உரிமைமாற்றி இருக்கும்போது அல்லது பெற்ற காசுப்பாய்ச்சலை ஓர் உடன்படிக்கையின் கீழ் தாமதமின்றி ஒரு மூன்றாம் தரப்புக்கு முழுமையாக கொடுப்பதற்கான கடப்பாட்டினை கூட்டுத்தாபனம் கொண்டிருக்கும்போது, அத்துடன் சொத்தின் சகல இடர்களையும் வெகுமதிகளையும் கணிசமாக உரிமைமாற்றாதபோது சொத்தின் கட்டுப்பாட்டினை உரிமைமாற்றி கொடுக்காதபோது அச்சொத்து சம்பந்தப்படுமளவுக்கு அது இனங்காணப்படும். அந்த வகையில், அதனைச் சார்ந்த பொறுப்பொன்றினையும் கூட்டுத்தாபனம் இனங்காண்கிறது. கூட்டுத்தாபனம் தக்கவைத்த உரிமை மற்றும் கட்டுப்பாட்டின் அடிப்படையில் உரிமைமாற்றப்பட்ட சொத்தும் சார்ந்த பொறுப்பும் அளக்கப்படுகின்றன. உரிமைமாற்றப்பட்ட சொத்து பற்றிய ஈடுபாடு உத்தரவாத வடிவினை எடுப்பதுடன் அச்சொத்தின் அடிப்படை பெறுமதி மற்றும் கூட்டுத்தாபனம் திருப்பிச்செலுத்த வேண்டிய தொகையின் குறைந்த விலையில் அது அளக்கப்படும்.

3.3.1.8 வலுக்குறைந்த நிதிசார் சொத்துக்கள்

நிதிசார் சொத்தொன்று அல்லது நிதிசார் சொத்துக்களின் குழுவொன்று வலுகுறைவடையும் நிலமையை காட்டுகிறதா என ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் கூட்டுத்தாபனம் மதிப்பீடு செய்கிறது. நிதிசார் சொத்தொன்று அல்லது நிதிசார் சொத்துக்களின் குழுவொன்று வலுகுறைவடையலாம் எனக் கருதப்படுவது, இடம்பெற்ற ஒரு சம்பவம் அல்லது சில சம்பவங்களின் பெறுபேறாக என தெளிவான சான்று இருந்தால் மாத்திரமே ஆகும். சொத்தின் ஆரம்ப இனங்காணலின் பிற்பாடு குறித்த நட்ட நிகழ்வு ஏற்படுதலானது, நம்பகரமாக மதிக்கக்கூடிய நிதிசார் சொத்தின் அல்லது நிதிசார் சொத்து தொகுதியின் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்வு மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. வலுகுறைவுக்கான சான்று, கடன்பட்டோர் அல்லது கடன்பட்டோர் குழுவினர் குறிப்பிடத்தக்க நிதி நெருக்கடியை அனுபவிப்பதாயின் அதற்கு வட்டி அல்லது முதல் செலுத்தலை தவறுதல் அல்லது நெறிபிறழ்தல், அவர்கள் வங்குறோத்து அல்லது பிற நிதி மீளமைப்புக்கு உள்ளாதல், அவதானிக்கத்தக்க தரவு மூலம் மதிப்பீடு செய்த எதிர்கால காசுப் பாய்வில் காட்டுகின்ற நிலுவைத்தொகை அல்லது பொருளாதார நிலமை சம்பந்தப்படும் தவறுதல் என்பவற்றை உள்ளடக்குகிறது.

3.3.1.9 காலக்கழிவு செய்யப்பட்ட கிரயத்தில் முன்கொண்டுசெல்லும் நிதிசார் சொத்துக்கள்

காலக்கழிவு செய்யப்பட்ட கிரயத்தில் முன்கொண்டுசெல்லும் நிதிசார் சொத்துக்கள் தொடர்பில் தனித்தனியாக முக்கியத்துவம்மிக்க நிதிசார் சொத்துக்கள் அல்லது தனித்தனியாக முக்கியத்துவமற்ற நிதிசார் சொத்துக்கள் சம்பந்தமாக வலுக்குறைவுக்கு உட்படும் நோக்கத்திலான சான்று உள்ளதா இல்லையா என கூட்டுத்தாபனம் முதலில் மதிப்பீடு செய்கிறது. வலுக்குறைவுக்கு உட்படும் நோக்கத்திலான சான்று இல்லை என கூட்டுத்தாபனம் தீர்மானித்தால், அது முக்கியமானதாலும் சரி அல்லது முக்கியமில்லாவிட்டாலும் சரி, ஒத்த வரவு அபாய பண்புகள் காணப்படும் நிதிசார் சொத்துக்களின் குழுவுக்கு குறித்த சொத்துக்களையும் உள்ளடக்கி கூட்டாக வலுக்குறைவுக்கு உட்படுத்தும் முகமாக மதிப்பீடு செய்யப்படும். வலுக்குறைவு நட்டங்களுடனான தற்போது காணப்படும் தனித்தனியாக வலுக்குறைவு மதிப்பீட்டுக்கு உட்படுத்தும் இனங்காணப்பட்ட சொத்துக்கள் வலுக்குறைவு கூட்டு மதிப்பீட்டில் உள்ளடங்குவதில்லை.

வலுக்குறைவு நட்டம் உறப்பட்டுள்ளது என நோக்கத்திலான சான்று இருப்பின், நட்டத் தொகையானது சொத்துக்கள் முன்கொண்டுசெல்லும் தொகைக்கும் மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்வின் (இன்னும் உறப்படாத எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால கடன் நட்டங்கள் நீங்கலாக) தற்போதைய பெறுமதிக்கும் இடையிலான வேறுபாடு ஆக அளக்கப்படும். மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப் பாய்வின் தற்போதைய பெறுமதி, குறித்த நிதிசார் சொத்தின் உண்மையான பயனுறு வட்டி வீதத்தில் தள்ளுபடி செய்யப்படும். கடன்தொகையானது மாறும் வட்டி வீதத்தைக் கொண்டிருப்பின் ஏதேனும் வலுக்குறைவு நட்டத்துக்கான தள்ளுபடி வீதம் நடைமுறை பயனுறு வட்டி வீதமாகும். படிக் கணக்கொன்றை பயன்படுத்துவதன் ஊடாக முன்கொண்டுசெல்லும் தொகையை குறைத்து நட்டத்தின் அளவு இலாபம் அல்லது நட்ட கூற்றில் இனங்காணப்படும். குறைத்து முன்கொண்டுசெல்லும் தொகை மீது வட்டி வருமானம் அட்டுறுவாக தொடர்ந்து காணப்படுவதுடன் வலுக்குறைவு நட்டத்தை அளக்கும் நோக்கத்திற்காக எதிர்கால காசுப் பாய்ச்சல்களை தள்ளுபடி செய்வதற்காக உபயோகிக்கும் வட்டி வீதம் அதற்காக பயன்படுத்தப்படும். வருமானக் கூற்றில் நிதி வருமானத்தின் ஒரு பகுதியாக வட்டி வருமானம் பதியப்படும். கூட்டு அறவீடு அனைத்தையும் அறவிட்டதன் பிற்பாடு எதிர்காலத்தில் மீளஅறவிடுதல் யதார்த்தம் இல்லை எனக் கருதும் கடன்களும் சார்ந்த படிகளும் பதிவழிக்கப்படும். வலுக்குறைவு இனங்காணப்பட்டதன் பின்னர் ஏற்படும் ஒரு நிகழ்வு காரணமாக மதிப்பிடப்பட்ட வலுக்குறைவு நட்டத் தொகை குறைதல் அல்லது அதிகரித்தல் பின்னரான ஆண்டொனிறல் இடம்பெற்றால் முன்பு இனங்கண்ட வலுக்குறைவு நட்ட படிக் கணக்கினை சீராக்குவதன்மூலம் அதிகரிக்கப்படும் அல்லது குறைக்கப்படும். எதிர்காலத்தில் பதிவழிக்கப்பட்டவை பின்னர் மீள அறவிடப்படின், அம்மீள அறவிடுகை இலாபம் அல்லது நட்ட கூற்றில் நிதிச் சொத்தில் வரவு வைக்கப்படும்.

3.3.2 நிதிசார் பொறுப்புக்கள்

3.3.2.1 ஆரம்ப இனங்காணல் மற்றும் அளவீடு

இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இன் நோக்கெல்லையில் அடங்கும் நிதிசார் பொறுப்புக்கள் ஏற்புடையவாறு இலாபம் அல்லது நட்டம், கடன்கள் மற்றும் கடன்பெறுகை பயனுறுவான ஹெஜிங் உடன்படிக்கையொன்றில் நிர்ணயிக்கப்பட்ட நியாயமான பெறுமதியிலுள்ள நிதிசார்

பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலில் அதன் நிதிசார் பொறுப்புக்களின் வகைப்படுத்தலை கூட்டுத்தாபனம் தீர்மானிக்கிறது. நிதிசார் பொறுப்புக்கள் யாவும் ஆரம்பத்தில் நியாயமான பெறுமதியில் இனங்காணப்படுவதுடன், கடன்கள் மற்றும் கடன்பெறுகை என்பன காலக்கழிவு செய்யப்பட்ட கிரயத்தில் முன்கொண்டு செல்லப்படுகின்றன. இது நேரடியாக சேரத்தக்க கொடுக்கல்வாங்கல் கிரயத்தை உள்ளடக்குகிறது.

கூட்டுத்தாபன நிதிசார் பொறுப்புக்களில் அடங்குபவை: வர்த்தக மற்றும் ஏனைய சென்மதிகள், வங்கி மேலதிகப்பற்று, கடன்கள் மற்றும் கடன்பெறுகைகள் என்பனவாம்.

3.3.2.2 பின்னரான அளவீடு

நிதிசார் பொறுப்புக்களின் அளவீடு பின்வருமாறு அவற்றின் வகைப்படுத்தல் மீது தங்கியுள்ளது:

3.3.2.3 இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய பெறுமதியிலான நிதிசார் பொறுப்புக்கள்

வியாபாரத்துக்காக வைக்கப்பட்டுள்ள நிதிசார் பொறுப்புக்கள் மற்றும் இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயமான பெறுமதிக்கு ஆரம்ப இனங்காணலின் மீது விதித்துரைக்கப்பட்ட நிதிசார் பொறுப்புக்கள் என்பன இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய பெறுமதியிலான நிதிசார் பொறுப்புக்களில் உள்ளடங்குகின்றன. நெருங்கிய காலத்தினுள் விற்கும் அல்லது மீள வாங்கும் நோக்கத்திற்காக பொறுப்புக்கள் பெறப்படின் அவை வியாபாரத்துக்காக வைக்கப்பட்டுள்ள நிதிசார் பொறுப்புக்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. இலங்கை கணக்கீட்டு நியமம் 39 இனால் வரையறுக்கப்பட்டவாறு ஹெஜிங் கொடுக்கல்வாங்கலின்போது ஹெஜிங் கருவிகளாக பெயரிடப்படாத கூட்டுத்தாபனம் செய்துகொண்டுள்ள வழிப்பொருள் நிதிசார் கருவிகளும் இவ்வகுதிக்குள் அடங்குகின்றன. பிரிக்கப்பட்ட பதிக்கப்பெற்ற வழிப்பொருள் உள்ளிட்ட வழிப்பொருள்கள், பயனுறு ஹெஜிங் கருவிகளாக பெயரிடப்பட்டாலொழிய அவை வியாபாரத்துக்காக வைக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் எனவும் வகைப்படுத்தப்படுகின்றன.

வியாபாரத்துக்காக வைக்கப்பட்டுள்ள பொறுப்புக்கள் மீதான ஆதாயங்கள் அல்லது இழப்புக்கள் இலாபம் அல்லது நட்ட கூற்றில் இனங்காணப்படுகின்றன.

ஆரம்ப இனங்காணலின்படி ஏதேனும் நிதிசார் பொறுப்பு இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாய பெறுமதியில் காணப்படுகிறது என விதித்துரைக்கப்படவில்லை.

3.3.2.4 கடன்கள் மற்றும் கடன்படல்கள்

ஆரம்ப இனங்காணலின் பின்னர், வட்டியுடனான கடன்கள் மற்றும் கடன்படல்கள் பயனுறு வட்டி வீத முறையைப் பயன்படுத்தி காலக்கழிவுசெய்யப்பட்ட கிரயத்தில் பின்னர் அளக்கப்படுகின்றன. பொறுப்புக்கள் இனங்காணப்படாதபோது அதேநேரம் பயனுறு வட்டி வீத முறையின் காலக்கழிவு செயன்முறையின் ஊடாக வருமானக் கூற்றில் ஆதாயங்கள் அல்லது

இழப்புக்கள் இனங்காணப்படுகின்றன.

கொள்வனவு மீதான ஏதேனும் கழிவு அல்லது வட்டம் மற்றும் பயனுறு வட்டி வீதத்தின் (ப.வ.வீ.) இணைந்த பகுதியொன்றான கட்டணங்கள் அல்லது செலவுகள் என்பவற்றை கருத்திற்கொண்டு காலக்கழிவுசெய்யப்பட்ட கிரயம் கணக்கிடப்படுகிறது. ப.வ.வீ. காலக்கழிவு, வருமானக் கூற்றில் நிதி செலவின் கீழ் அடங்குகிறது.

3.3.2.5 இனங்காணப்படாமை

பொறுப்பின் கீழான கடப்பாடு நிறைவேற்றப்படும்போது அல்லது இரத்துச்செய்யப்படும்போது அல்லது காலாவதியாகும்போது நிதிசார் பொறுப்பு ஒன்று இனங்காணப்படாமைக்கு உட்படும்.

தற்போதிருக்கும் பொறுப்பு ஒன்று கணிசமாக வேறுபட்ட நியதிகள்மேல் அதே கடன்வழங்குநரிடமிருந்து மற்றொருவரினால் பதிலீடுசெய்யப்படும்போது அல்லது தற்போதிருக்கும் பொறுப்பு ஒன்றின் நியதிகள் கணிசமாக திரிபுபடுத்தப்படும்போது, அத்தகைய பரிமாற்றம் அல்லது திரிபுபடுத்தல் ஆரம்ப பொறுப்பின் இனங்காணப்படாமையாக கருதப்படுவதுடன் புதிய பொறுப்பு இனங்காணப்பட்டதாக அமையும். அவ்வாறான முன்கொண்டுசெல்லும் தொகைகளில் வேறுபாடு வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

3.3.2.6 நிதிசார் கருவிகள் எதிரீடுசெய்யப்படல்

இனங்காணப்பட்ட தொகைகளை எதிரீடுசெய்வதற்காக அமுல்படுத்தக்கூடிய சட்ட உரிமை இருந்தால் அத்துடன் நிகர அடிப்படையில் கடன்களை கொடுத்துதீர்ப்பதற்கு அல்லது சொத்துக்களை விற்று பொறுப்புக்களை அதே நேரத்தில் கொடுத்துதீர்ப்பதற்கான எண்ணம் இருந்தால் மட்டுமே நிதிசார் சொத்துக்களும் நிதிசார் பொறுப்புக்களும் நிதி நிலமைக் கூற்றில் அறிக்கையிடப்பட்ட தேறிய தொகையுடன் எதிரீடுசெய்யப்படுகின்றன.

கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளில் விசேடமாக வெளிப்படுத்தப்பட்டவாறு ஏதேனும் கணக்கீட்டு நியமம் அல்லது வரைவிலக்கணம் மூலம் தேவைப்படுத்தப்பட்டாலொழிய அல்லது அனுமதிக்கப்பட்டாலொழிய வருமானமும் செலவும் வருமானக் கூற்றில் எதிரீடுசெய்யப்பட மாட்டா.

3.3.2.7 நிதிசார் கருவிகளின் நியாயமான பெறுமதி

ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் முனைப்பான சந்தைகளில் விற்கப்படும் நிதிசார் கருவிகளின் நியாயமான பெறுமதி, கொடுக்கல்வாங்கல் கிரயத்துக்கான குறைப்பு ஏதுமின்றி கூறப்பட்ட சந்தை விலைகளினால் அல்லது விற்பனையாளர் விலை கூறல்களினால், நீண்ட தன்மையையுடைய கூறுவிலை மற்றும் குறுகிய தன்மையையுடைய கோரப்படும் விலை தீர்மானிக்கப்படுகிறது. முனைப்பான சந்தைகளில் விற்கப்படாத நிதிசார் கருவிகள் பொருட்டு, பொருத்தமான விலையிடல் நுட்பங்களை உபயோகித்து நியாய பெறுமதி தீர்மானிக்கப்படுகிறது.

அவ்வகையான நுட்பங்களில் அண்மைக்கால கைக்கெட்டிய சந்தை கொடுக்கல்வாங்கல்கள் கணிசமாக சமமான மற்றுமொரு கருவியின் நடைமுறை நியாய பெறுமதிக்கான தொடர்பு தள்ளுபடிசெய்யப்பட்ட காசுபாய்ச்சல் பகுப்பாய்வு அல்லது ஏனைய பெறுமதியிடல் மாதிரியுருகள் என்பன அடங்குகின்றன.

நிதிசார் கருவிகளின் நியாயமான பெறுமதியின் பகுப்பாய்வு மற்றும் அவை எவ்வாறு அளவிடப்படுகின்றன என்பதுபற்றிய விபரங்கள், குறிப்பு இலக்கம் .23இல் தரப்பட்டுள்ளன.

3.4. பிந்திய தொழில் நலன்கள்

3.4.1. வரையறுக்கப்பட்ட நலன் திட்டம்

எதிர்வுகூறப்பட்ட அலகு கடன் (எஅக) முறையைப் பயன்படுத்தி அறிக்கையிடும் திகதியில் நிலவும் வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் நிகழ்கால பெறுமதியே நிதி நிலமைக் கூற்றில் இனங்காணப்பட்ட பொறுப்பாகும். பணிக்கொடைப் பொறுப்பு வெளிவாரியாக நிதியிடப்படுவதுமில்லை, உண்மையாக காப்பீட்டுமதிப்பீடுசெய்யப்படுவதுமில்லை. பணிக்கொடைப் பொறுப்பானது, வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் நிகழ்கால பெறுமதியை அடைவதற்குத் தேவையான எடுகோள்களை கருத்திற்கொண்டு எதிர்வுகூறப்பட்ட அலகு கடன் (எஅக) முறையைப் பயன்படுத்தி மதிப்பிடப்படுகிறது.

இருப்பினும், 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் பிரகாரம் ஓர் ஊழியர் தொடர்ந்து 5 வருடங்களை பூர்த்தி செய்ததன் பின்னரே பணிக்கொடை கொடுப்பனவுக்கான பொறுப்பு எழுகிறது.

3.4.2. வரையறுக்கப்பட்ட உதவுதொகைத் திட்டம் – ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்

வரையறுக்கப்பட்ட உதவுதொகைத் திட்டம் என்பது தொழிலுக்கு பின்னரான நலன் திட்டமொன்று ஆவதுடன் இதன் கீழ் ஒரு நிறுவனம் மற்றொரு நிறுவனத்துக்கு நிலையான உதவுதொகையொன்றை செலுத்துவதுடன், மேலதிக தொகைகளை செலுத்துவதற்கான சட்ட கடப்பாடு அல்லது அமைப்புவழி கடப்பாடு எதனையும் கொண்டிருப்பதில்லை. ஊழியர் சேமலாப நிதிய உதவுதொகை மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய உதவுதொகை பொருட்டு தகுதியுள்ள ஊழியர் அனைவரும் இயைபான நியதிச்சட்டங்களுக்கு இணங்க உரிய உதவுதொகை நிதியங்களினால் பாதுகாப்பு பெறுகின்றனர். வரையறுக்கப்பட்ட உதவுதொகைத் திட்டங்களுக்கான தொழில்கொள்வோரின் உதவுதொகைகள் அவை உறப்படும்போது செலவொன்றாக இலாபம் அல்லது நட்டக் கூற்றில் இனங்காணப்படுகின்றன.

3.5. ஏற்பாடு, நிகழத்தக்க பொறுப்புக்கள் மற்றும் நிகழத்தக்க சொத்துக்கள்

ஏற்பாடு

கடந்தகால நிகழ்வொன்றின் ஒரு பெறுபேறாக நிகழ்கால கடப்பாடு (சட்ட அல்லது

இலங்கை அரச பொறியியற் கூட்டுத்தாபனம்
2018 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான
நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

அமைப்புவழி) ஒன்றினை கூட்டுத்தாபனம் கொண்டிருக்கும்போது பொருளாதார நன்மைகளைக் கொண்ட வளங்களின் வெளிப்பாய்ச்சல் குறித்த கடப்பாட்டினை கொடுத்துதீர்ப்பதற்கு தேவை எனவும், குறித்த கடப்பாட்டின் தொகையை நம்பகரமான மதிப்பிட முடியும் எனவும் நிச்சயிக்கக்கூடியவிடத்து ஏற்பாடுகள் இனங்காணப்படுகின்றன. ஏதேனும் ஏற்பாடு ஒன்றின் ஏதேனும் அல்லது சகல பணத்தையும் மீள்நிரப்புவதற்கு கூட்டுத்தாபனம் எண்ணுவதாயின், குறித்த மீள்நிரப்பல் பெரும்பாலும் உறுதியானவிடத்து அது வேறொரு சொத்தாக இனங்காணப்படுகின்றது. வளங்களின் வெளிப்பாய்ச்சல் தொலைவில்லாவிடின் சகல நிகழத்தக்க பொறுப்புக்களும் நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகளாக வெளிப்படுத்தப்படுகின்றன.

நிகழத்தக்க பொறுப்புக்கள்

பொருளாதார நன்மைகளின் உட்பாய்ச்சல் நிச்சயிக்கப்படமுடியாதவிடத்து அல்லது அளக்க முடியாதவிடத்து நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வு அல்லது நடைமுறை கடப்பாடுகளின்மூலம் மட்டும் உறுதிப்படுத்தப்படுகிற நிகழக்கூடிய கடப்பாடுகள் நிகழத்தக்க பொறுப்புக்கள் ஆகும். மேலும், நிகழத்தக்க பொறுப்புக்கள் நிதி நிலமைக் கூற்றில் பதியப்படுவதில்லை, இருப்பினும், அவற்றின் உருவாக்கம் தொலைவில்லாவிடின் மட்டும் அதில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

தற்போது கூட்டுத்தாபனமானது, தீர்ப்பு வழங்கப்படவுள்ள சில சட்ட நடவடிக்கைகள் மற்றும் வியாபார பொது நடவடிக்கைகளை கொண்டுநடாத்தும்போது எழுகின்ற சில உரிமைக்கோரிக்கைகளுக்கு முகங்கொடுத்துள்ளது. சட்டப் பிணக்குகள் பொருட்டான ஏற்பாடாக அட்டுறுவாகவுள்ள பணத்தொகைகளுக்கு மேலதிகமாக கூட்டுத்தாபனத்தின் நிதிநிலமை, செயற்பாட்டு இலாபம் அல்லது காசுப் பாய்ச்சல் மீது குறிப்பிடத்தக்க தாக்கம் செலுத்தும் முகமாக வெவ்வேறாக அல்லது திரளாக தீர்ப்புகள் எதிர்பார்க்கிற சட்ட நடவடிக்கைகள் மற்றும் உரிமைக்கோரிக்கை எதனையும் கூட்டுத்தாபனம் எதிர்பார்ப்பதில்லை. நிகழத்தக்க வெளிப்பாடுகள் 24மே குறிப்பில் எடுத்துக் காட்டப்படடுள்ளன.

நிகழத்தக்க சொத்துக்கள்

பொருளாதார நன்மைகளின் உட்பாய்ச்சல் நிச்சயிக்கப்படக்கூடியவிடத்து நிகழத்தக்க சொத்துக்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

3.6. அரசாங்க மானியங்கள்

தொடர்புற்ற நிபந்தனைகள் அனைத்தும் பூர்த்திசெய்யப்பட்டு மானியம் கிடைக்கப்படுமென நியாயமான உத்தரவாதம் இருப்பின் அரசாங்க மானியங்கள் இனங்காணப்படும். மானியமானது செலவு விடயமொன்றுக்கு சம்பந்தப்படும்பொழுது செலவுகளை ஈடுசெய்வதற்கு உத்தேசிக்கும் செலவுகளுக்கு பொருத்தும் தேவையான காலப்பகுதியில் வருமானமாக இனங்காணப்படுகிறது. மானியமானது சொத்சொன்றுடன் சம்பந்தப்படுமிடத்து, நியாயமான பெறுமதி பிற்போட்ட வருமான கணக்கிற்கு வரவு வைக்கப்படுவதுடன் சமமான வருடாந்த தவணைகள்மூலம் இயைபான சொத்தின் எதிர்பார்க்கப்பட்ட பாவனைக் காலம் முழுவதும் வருமானக் கூற்றிக்கு

விடுவிக்கப்படுகிறது. கூட்டுத்தாபனம் பணமல்லாத மானியங்களை பெறுமிடத்து, சொத்து மற்றும் மானியம் என்பன பெயரளவு தொகைகளில் மொத்தமாக பதியப்படுவதுடன் சமமான வருடாந்த தவணைகள்மூலம் ஏற்புடைய சொத்தின் நன்மைகளை அனுபவிக்கும் விதம் பொறுத்து எதிர்பார்க்கப்பட்ட பாவனைக் காலம் முழுவதும் வருமானக் கூற்றிக்கு விடுவிக்கப்படுகின்றன.

3.7. விரிவான வருமானக் கூற்று

3.7.1. வருமானம்

கூட்டுத்தாபனத்தின் வழமையான நடவடிக்கைகளினுள் வர்த்தக கழிவுகள் மற்றும் புரள்வுடன் தொடர்புற்ற வரிகள் தவிர்ந்த பொருட்களை விற்பதன்மூலமும் சேவைகளை வழங்குவதன்மூலமும் பெறப்பட்ட தொகைகளை வருமானம் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

3.7.1.1. வருமானம் இனங்காணப்படல்

பொருளாதார நன்மைகள் கூட்டுத்தாபனத்துக்குள் பாயும் எனவும் வருமானம் மற்றும் உறப்பட்ட அல்லது உறப்படவுள்ள இணைந்த செலவுகள் நம்பகரமாக அளவிடலாம் எனவும் நிச்சயிக்ககூடிய தூரத்திற்கு வருமானம் இனங்காணப்படுகிறது. நிறுவனத்தின் உள்ளக விற்பனைகளை நீக்கியதன் பிற்பாடு, வர்த்தக கழிவுகள் மற்றும் விற்பனை வரிகள் தவிர்ந்த பெற்ற அல்லது பெறத்தக்க பிரதிபயனின் நியாயமான பெறுமதியில் வருமானம் அளவிடப்படுகிறது. வருமானத்தை இனங்காணும் நோக்கத்திற்காக பின்வரும் குறித்துரைத்த பிரமாணங்கள் உபயோகிக்கப்படுகின்றன.

3.7.1.1.1. நிர்மாண ஒப்பந்தம்

ஒப்பந்தமொன்றின் வருமானம் நம்பகரமானதாக மதிப்பிடக்கூடியபோது, அறிக்கையிடும் திகதியில் உள்ளவாறு ஒப்பந்த நடவடிக்கை நிறைவுசெய்த கட்டத்துக்கு தொடர்புபட்டு வருமானம் இனங்காணப்படும்(நிறைவு சதவீத முறை). ஒப்பந்தமொன்றின் வருமானம் நம்பகரமானதாக மதிப்பிட முடியாதபோது, மீளஅறவிடக்கூடிய சாத்தியமுள்ளதாக உறப்பட்ட செலவுகளின் தூ ரத்துக்கு வருமானம் இனங்காணப்படும். மொத்தச் செலவு மொத்த வருமானத்தை விஞ்சும் என நிச்சயிக்கப்படும்பொழுது எதிர்பார்க்கப்பட்ட நட்டமானது செலவொன்றாக உடனடியாக இனங்காணப்படும்.

இற்றைவரையில் நிறைவேற்றப்பட்ட வேலை பொருட்டு உறப்பட்ட செலவுக்கு மதிப்பிடப்பட்ட மொத்தச் செலவு எனும் விகிதாசாரத்துக்கு தொடர்புபட்டு நிறைவுசெய்த கட்டம் அளவிடப்படுகிறது.

இலங்கை அரச பொறியியற் கூட்டுத்தாபனம்
2018 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான
நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

3.7.1.1.2. பொருட்கள் விற்பனை

வழமையான வியாபார நடவடிக்கையில் பொருள் விற்பனையில் இருந்தான வருமானமானது, தேறிய திரும்பல், வர்த்தக கழிவு மற்றும் தொகுதி தள்ளுபடி ஆகியவற்றை கழித்து பெற்ற அல்லது பெறத்தக்க பிரதிபயனின் நியாயமான பெறுமதியில் அளக்கப்படும். விற்கப்பட்ட பொருள் மீதான பயனுறு கட்டுப்பாடு அல்லது உரிமை பற்றி பொதுவாக உபயோகிக்கப்படுகின்ற அளவில் தொடர் முகாமைத்துவ ஈடுபாட்டினை கூட்டுத்தாபனம் வைத்துக்கொள்ளாமல் பொருட்களின் குறிப்பிடத்தக்க அபாயம் மற்றும் உரிமையின் வெகுமதிகளை பொருளை வாங்குபவருக்கு மாற்றும்போது பொருள் விற்பனையில் இருந்தான வருமானம் இனங்காணப்படும்.

3.7.1.1.3. சேவைகளை வழங்குதல்

குறிப்பிடத்தக்க செயலாற்றுகை கடப்பாடுகள் அனைத்தும் வழங்கப்பட்டதும் வழங்கப்பட்ட சேவைகளிலிரந்தான வருவானம் விரிவான வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

3.7.1.1.4. ஏனைய வருமானம்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் விற்பனையில் இருந்து கிடைக்கும் வருமானத்திலிருந்து அவற்றின் முன்கொண்டுசெல்லும் பெறுமதி மற்றும் அதனுடன் தொடர்புடைய செலவினங்கள் ஆகியவற்றை குறைப்பதன்மூலம் கிடைக்கும் இலாபங்கள் அல்லது நட்டங்கள் ஏனைய வருமானங்களாக இனங்காணப்படும்.

வெளிநாட்டு நாணய ஆதாயங்கள் மற்றும் இழப்புக்கள் யாவும் தேறிய அடிப்படையில் அறிக்கையிடப்படுகின்றது.

துண்டுப்பொருள் விற்பனை இருந்தான வருமானமானது, பொருட்களின் குறிப்பிடத்தக்க அபாயம் மற்றும் உரிமையின் வெகுமதிகளை பொருளை வாங்குபவருக்கு மாற்றும்போது, பொதுவாக பொருள் விநியோகிக்கப்படுகையில் இனங்காணப்படும்.

3.7.1.1.5. வட்டி வருமானம்

காலக்கழிவு செய்யப்பட்ட கிரயத்தில் அளக்கப்பட்ட சகல நிதிசார் கருவிகள் பொருட்டும், விற்பனைக்கு தயாரானதாக வகைப்படுத்தப்பட்ட வட்டியுடனான நிதிசார் சொத்துக்கள் பொருட்டும், வட்டி வருமானம் அல்லது செலவு பயனுறு வட்டி வீதத்தை(ப.ச.சீ.) உபயோகித்து பதியப்படுகிறது. குறித்த பயனுறு வட்டி வீதம் எனப்படுவது, குறித்த நிதிசார் கருவியின் எதிர்பார்க்கப்பட்ட பயன்பாட்டுக் காலம் ஊடாக அல்லது குறைந்த காலம் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பணக் கொடுப்பனவு அல்லது பெறுவனவு மீது அவ்வாறின்றேல் பொருத்தமானவிடத்து உரிய நிதிசார் சொத்தின் அல்லது பொறுப்பின் முன்கொண்டுசெல்லும் நிகர பெறுமதி மீது சரியாக தள்ளுபடி செய்யும் வீதமாகும்.

3.7.2. செலவினம் இனங்காணப்படல்

3.7.2.1. நிர்மாண ஒப்பந்தங்கள்

எதிர்கால ஒப்பந்த நடவடிக்கைகள் பொருட்டு ஏதேனும் சொத்தொன்றினை உருவாக்கினாலொழிய ஒப்பந்த செலவுகள் அவை உறப்பட்ட செலவுகளாக இனங்காணப்படுகின்றன. ஓர் ஒப்பந்தத்தின் மீதான எதிர்பார்க்கப்பட்ட நட்டமொன்று இலாபம் அல்லது நட்ட கூற்றில் உடனடியாக இனங்காணப்படும்.

3.7.2.2. ஏனைய செலவினங்கள்

வியாபாரத்தை நடாத்தும்போதும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை வினைத்திறனான நிலையில் பராமரிக்கும்போதும் உறப்பட்ட செலவினம் அனைத்தும் ஆண்டுக்கான இலாபத்தை தீர்மானிக்கையில் வருமானத்துக்கு அறவீடு செய்யப்பட்டுள்ளது.

விரிவான வருமானக் கூற்றினை சமர்ப்பிப்பதன் நோக்கம் பொருட்டு, கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகை பற்றிய அடிப்படைக்கூறுகளை செலவு முறையின் தொழிற்பாடு நியாயமாக முன்வைக்கிறது என்பது பணிப்பாளர்களின் அபிப்பிராயமாகும். எனவே, அத்தகைய முன்வைப்பு முறை கடைப்பிடிக்கப்படுகிறது.

3.7.2.3. கடன்படல் கிரயங்கள்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை நிர்மாணித்தல் அல்லது அபிவிருத்திசெய்தலுடன் நேரடியாக சேர்ந்த செலவுகளைத் தவிர எக்காலப்பகுதியில் செலவுகள் உறப்பட்டதோ அக்காலப்பகுதியில் கடன்படல் கிரயங்கள் செலவுகளாக இனங்காணப்படும். அவை நிர்மாணம் அல்லது அபிவிருத்தி காலத்தின்போது சொல்லப்பட்ட சொத்துக்களின் செலவின் பகுதியொன்றாக பயன்படுத்தப்படும்.

3.7.3. வரிவிதிப்பு

3.7.3.1. நடைமுறை வரிகள்

நடைமுறை மற்றும் முன்னைய காலப்பகுதிக்கான நடைமுறை வருமான வரி பொறுப்புக்கள், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்துக்கு செலுத்தும் அறவிடுவதற்கு எதிர்பார்க்கும் தொகையில் அளக்கப்படுகின்றன. அறிக்கையிடும் திகதியில் சட்டமாக்கப்பட்ட அல்லது கணிசமாக சட்டமாக்கப்பட்ட வரி வீதங்கள் மற்றும் வரிச் சட்டங்கள் ஆகியவற்றை பயன்படுத்தி வரி அளவு கணிக்கப்படுகிறது. வருமான வரிக்கான ஏற்பாடானது, நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்களின் அடிப்படைகூறுகளின் அடிப்படையில் அமைவதுடன் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க கணிக்கப்படுகிறது.

இலங்கை அரச பொறியியற் கூட்டுத்தாபனம் 2018 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

இயைபான விபரங்கள் நிதிக் கூற்றுக்களுக்கான உரிய குறிப்புக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன.

3.7.3.2. பிற்போடப்பட்ட வரிவிதிப்பு

சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் வரி அடிப்படைகளுக்கும் நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக அவற்றினது முன்கொண்டுசெல்லும் தொகைகளுக்கும் இடையில் அறிக்கையிடும் திகதியில் நிலவும் தற்காலிக வேறுபாடுகள் மீது பொறுப்பு முறையைப் பயன்படுத்துவதன்மூலம் பிற்போடப்பட்ட வரிவிதிப்பு ஏற்பாடு செய்யப்படுகிறது. சகல தற்காலிக வேறுபாடுகள் பொருட்டு பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் இனங்காணப்படுகின்றன. சகல குறைக்கத்தக்க தற்காலிக வேறுபாடுகளும், உபயோகிக்காத வரி வரவு மற்றும் உபயோகிக்காத வரி இழப்புக்களின் முன்கொண்டுசெல்லலும், அவை குறைக்கத்தக்க தற்காலிக வேறுபாடுக்கு எதிராக வரி இலாபம் காணப்படும் எனவும், அத்துடன் உபயோகிக்காத வரி வரவு மற்றும் உபயோகிக்காத வரி இழப்புக்களின் முன்கொண்டுசெல்லும் தொகைகளை பயன்படுத்தலாம் எனவும் நிச்சயிக்கப்படுமளவுக்கு பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் இனங்காணப்படும்.

அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் உள்ளவாறான சட்டமாக்கப்பட்டிருந்த அல்லது கணிசமாக சட்டமாக்கப்பட்டிருந்த வரி வீதங்கள் மற்றும் வரிச் சட்டங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் உரிய சொத்து தேறப்படும்போது அல்லது பொறுப்பு கொடுத்துதீர்க்கும்போது உரிய ஆண்டிற்கு பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கும் வரி வீதங்களில் பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன அளக்கப்படுகின்றன.

நடைமுறை வரி பொறுப்புக்களுக்கு எதிராக நடைமுறை வரி சொத்துக்களை எதிரீடுசெய்யும் முகமாக சட்டரீதியாக அமுல்படுத்தக்கூடிய உரிமை காணப்படுமாயின் அத்துடன் உரிய பிற்போடப்பட்ட வரிகள் அதே வரிவிதிக்கத்தக்க நிறுவனத்துக்கும் அதே வரிவிதிப்பு அதிகாரிக்கும் சம்பந்தப்படுமாயின் பிற்போடப்பட்ட வரி சொத்துக்களும் பிற்போடப்பட்ட வரி பொறுப்புக்களும் எதிரீடுசெய்யப்படுகின்றன. சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் வரி அடிப்படைகளுக்கும் நிதி அறிக்கையிடல் நோக்கங்களுக்காக அவற்றினது முன்கொண்டுசெல்லும் தொகைகளுக்கும் இடையில் அறிக்கையிடும் திகதியில் நிலவும் தற்காலிக வேறுபாடுகள் மீது பொறுப்பு முறையைப் பயன்படுத்துவதன்மூலம் பிற்போடப்பட்ட வரி ஏற்பாடு செய்யப்படுகிறது.

3.8. தொடர்புடைய தரப்பினர் சார்ந்த கொடுக்கல்வாங்கல்

ஏதேனும் விலையை அறவிடுவதா, இல்லையா எனும் விடயத்தை கருத்திற்கொள்ளாது ஒரு தரப்பினர், நிதிசார் மற்றும் செயற்பாட்டுக் கொள்கைகள் / மற்றவரின் தீர்மானங்களை விஞ்சி கட்டுப்படுத்தும் ஆற்றலை அல்லது குறிப்பிடத்தக்க செல்வாக்கினை பிரயோகிக்கும் ஆற்றலை கொண்டிருக்கும் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பில் வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இயைபான விபரங்கள் நிதிக் கூற்றுக்களுக்கான உரிய குறிப்புக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன.

இலங்கை அரச பொறியியற் கூட்டுத்தாபனம்
2018 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கான
நிதிக்கூற்றுகளுக்கான குறிப்புகள்

3.9. அறிக்கையிடல் காலத்தின் பிற்பாடு தோன்றியுள்ள நிகழ்வு

அறிக்கையிடும் கால இறுதிற்கும் நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட திகதிக்கும் இடையில் இடம்பெறுகின்ற சாதகமான, பாதகமான நிகழ்வுகள் யாவும் அறிக்கையிடல் காலத்தின் பின்னரான நிகழ்வுகளாக கருதப்படுகின்றன.

அறிக்கையிடல் காலத்தின் பின்னர் இடம்பெறும் நிகழ்வுகளின் முக்கியத்துவம் கருத்திற்கொள்ளப்பட்டு, தேவையானவிடத்து பொருத்தமான சீராக்கங்கள் அல்லது வெளிப்படுத்தல்கள் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்படுகின்றன.

3.10. கூறுசார் அறிக்கையிடல்

கூறு என்பது ஒன்றில் சம்பந்தப்பட்ட பொருட்களை அல்லது சேவைகளை (வியாபாரக் கூறு) வழங்குகையில், அல்லது குறித்ததொரு பொருளாதார சுற்றாடலினுள் (புவியியல்சார் கூறு) பொருட்களை அல்லது சேவைகளை வழங்குகையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்தின் பிரித்துக்காட்டுகின்ற பாகமொன்றாகும் அது குறித்த கூறுகளிருந்து வேறுபடும் அபாயங்கள் மற்றும் திரட்டுகளுக்கு உட்பட்டதாகும். கூட்டுத்தாபனத்தின் வியாபாரம் மற்றும் புவியியல்சார் கூறுகள் தொடர்பில் கூறு தகவலானது முன்வைக்கப்படுகிறது. கூறு அறிக்கையிடல் பொருட்டான கூட்டுத்தாபனத்தின் முதன்மையான வடிவமைப்பு வியாபாரக் கூறுகளின் அடிப்படையில் அமைந்துள்ளது.

